# உபத்திரவ காலம்

# 2



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# உபத்திரவ காலம்

~~~~~~~~~~~~~~~~~~~

**(இது தீர்க்கதரிசி பிரன்ஹாம் பேசிய செய்திகளிலிருந்து, 'உபத்திரவ காலம்' என்ற தலைப்பில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிய, கீழே குறிப்பிட்டுள்ள செய்திகளை முழுமையாக வாசிக்கவும்.)**

~~~~~~~~~~~~~~~~~~~

380. ஆனால் மணவாட்டி தேவனுடைய கிருபையினால் இரத்தத்தின் கீழ் இருந்ததால், அவள் இதை அனுபவிக்க வேண்டிய அவசியமில்லாமல் போயிற்று. அவளுக்கு உபத்திரவ காலம் கிடையவே கிடையாது. இனிமேல் சபைக்கு அடுத்ததாக நிகழவேண்டியது

எடுக்கப்படுதலாகும். ஆமென்! ஆமென்! இதை நாம் தொடர முடியும் (பேச முடியும்தமிழாக்கியோன்) ஓ! இது எனக்கு எவ்வளவு பிரியமாயிருக்கிறது!

## 63-03-18 முதலாம் முத்திரை

~ ~ ~ ~ ~

228. உபத்திரவ காலத்திற்குப் பின்பு துன்மார்க்கர் எங்கிருப்பார்கள்? சாம்பலாய்ப் போவார்கள். ஓரேபிலே இஸ்ரவேலரெல்லாருக்காகவும் என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும் நியாயங்களையும் நினையுங்கள். இதோ கர்த்தருடைய (சகோதரன் பிரான்ஹாம் அந்த (that) என்று வாசிக்கிறார் - தமிழாக்கியோன்) பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்தில் எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன் (மல். 4,5).

229. ஆமென்! பழைய ஏற்பாடு இதைக் கூறிவிட்டு முடிவு பெறுகிறது. புதிய ஏற்பாடு அது போன்றே முடிவு பெறுகிறது. அங்ஙனமாயின், இதை நீங்கள் எப்படித் தள்ளிவிடமுடியும்? அவ்விதம் முடியாது. பாருங்கள், 'அந்த நாள்' வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்தில் எலியா தீர்க்கதரியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியை சங்காரத்தால் அடிக்காதப்படிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக் களிடத்திற்கும் திருப்புவான் (மல். 4:6). (ஹும்).

230. அது கர்த்தருடைய வார்த்தையாகும். அவர் அனுப்புவதாக வாக்களித்துள்ளார். அது வந்தாக வேண்டும். அது இப்பொழுது எவ்விதம் சம்பவிக்கிறது என்பதை நீங்கள்

கவனியுங்கள். தேவன் அதை எவ்விதம் செய்யப்போகிறார் என்பதைக் காண மிகவும் அழகாயிருக்கிறது. முதலாவதாக மணவாட்டி மணவாளனுடன் செல்கிறாள். அதன் பின்னர் துன்மார்க்கர் அவியாத அக்கினியில் எரிந்து போவார்கள். உலகம் சுத்தி கரிக்கப்பட்ட பின்னர், அது மறுபடியும் உண்டாகிறது. உலகிலுள்ள அனைத்தும் அப்பொழுது சுத்திகரிக்கப்படும்.

231. மகத்தான அந்த கடைசி தருணத்தில் எரிமலைகள் குழம்பைக்கக்கும்; உலகமே பிளந்து போகும். பாவமென்னும் சாக்கடைக் குழியும், பூமியின் மேல் காணப்படும் யாவும் ஒன்றுமில்லாமல் உருகிப்போகும். அவை தேவனால் அனுப்பப்பட்ட தீயினால் எரிந்து போகும் போது, ஒரு துளி மையின் நிறம் வெண்மையாக்கும் திரவத்தில் விழும் போது எவ்வாறு

மறைந்து மூல நிலைக்குத் திரும்புகிறதோ, அவ்வாறே அசுத்தமாயிருக்கும் எல்லா பொருட்களும் எரிந்துபோய் அதனதன் மூல நிலைக்குத் திரும்பும். அப்பொழுது சாத்தானும் பாவத்துடன் கூட எரிந்து போவான். இவ்வுலகம் புதுபிக்கப்பட்டு, ஏதேன் தோட்டத்தின் அழகைப் போன்று விளங்கும். சரி, ஓ! அந்த மகத்தான நேரம் நம் முன்னால் காத்திருக்கிறது.

**63-03-18 முதலாம் முத்திரை**

~~~~~

225. இப்பொழுது, இந்த எழுபது வாரங்கள் பரிபூரணமாய் நியமிக்கப்பட்டுள்ளன. தானியேல் கூறியவண்ணம், மேசியா வந்து வாரத்தின் பாதியில் சங்கரிக்கப்படுவார். இயேசு மூன்றரை வருடகாலமாக தீர்க்கதரிசனம் உரைத்தார். இப்பொழுது தானியேலின் இந்த வாரத்தின் பாதியில்தான் மேசியா
~~~~~

சங்கரிக்கப்பட்டார். இந்த வாரத்தின் பிற்பகுதிதான் உபத்திரவ காலம். அப்பொழுது மணவாட்டி சபை...ஓ! இது மிகவும் மகத்தானது! இதை இழந்து போகவேண்டாம். மணவாட்டி மணவாளனுடன் செல்கின்றாள். ஆயிர வருஷ அரசாட்சிக்குப் பிறகு, அவர்கள் துன்மார்க்கரின் சாம்பலை மிதிப்பார்கள்.

**63-03-18 முதலாம் முத்திரை**

~~~~~

215. கடைசி காலத்தில், உபத்திரவ காலம் தொடங்கும்போது, இப் பொழுது அந்த மூன்றரை வருடங்கள் எங்குள்ளது என்பதை, நாம் ஒரு நிமிடம், திரும்பிக் காண்போம்... மூன்றரை வருடகாலம்... அல்லது தானியேலின் எழுபது வாரங்கள் தானியேல் மொழிந்த எழுபது வாரங் களின் பிற்பகுதி மூன்றரை வருடங்கள். சபையின் காலங்களிலிருந்து எத்தனை
~~~~~

பேருக்கு இது ஞாபகமிருக்கிறது? (சபையார் “ஆமென்'' என்கின்றனர்- ஆசி) பாருங்கள்? ''எழுபது வாரங்கள் நியமிக்கப்பட்டுள்ளன.'' எவ்வளவு அழகாகப் பொருந்துகிறது. பாருங்கள். “மேசியா வந்து அப்பொழுது சங்கரிக்கப்படுவார். அவர் வாரத்தின் பாதியில் பலியையும், காணிக்கையையும் ஒழியப் பண்ணுவார். ஆகவே, யூதர்களுக்காக மேசியாவின் போதகத்திற்காக, இன்னும் மூன்றரை வரு டங்கள் அங்கே உள்ளன. (தானியேலின் எழுபதாவது வாரத்தின் பிற்பகுதி - தமிழாக்கியோன்)

216. தேவன் ஒரே சமயத்தில் யூதர்களிடமும், புற ஜாதிகளிடமும் ஈடு படுதில்லை. அவர் இஸ்ரவேலரை ஒரு நாடாக நடத்துகிறார். ஆனால் புற ஜாதியாரிடம் தனிப்பட்ட நபராக ஈடுபடுகிறார். அவர் புறஜாதியார்

அனைவரையும் மணவாட்டியாக எடுத்துக்கொள்வதில்லை. புறஜாதியார் மத்தியிலிருந்து ஒரு கூட்ட ஜனத்தை அவர் மணவாட்டியாக எடுத்துக்கொள்கிறார். பாருங்கள்? இப்பொழுது இஸ்ரவேலரை ஒரு நாடாக வழி நடத்திக்கொண்டு வருகிறார், அவள் இப்பொழுது ஒரு நாடாக ஆகி விட்டாள்.

## 63-03-18 முதலாம் முத்திரை

~~~~~

18. ஆனால், இப்பொழுது, முதல் மூன்று அதிகாரங்கள் ஏழு சபையின் காலங்களைப் பற்றினவை. 4-ம் அதிகாரத்தில் யோவான் பர லோகத்திற்கு எடுக்கப்படுகிறான். பாருங்கள்? நாம் சபையின் காலங்களைக் காண்கிறோம். சபையின் காலங்களைக் குறித்து அதிகம் சொல் லப்படவில்லை. சம்பவிக்க போகிற உபத்திரவ காலத்திற்குள் அவர்கள்
~~~~~

சபையை பொருத்துகின்றனர். அங்கேதான் அவர்கள் ஆச்சரியமடைவர் என்று நான் நினைக்கிறேன். அநேகருக்கு எடுக்கப்படுதல் நிகழ்ந்ததே தெரியாமலிருக்கும். நான் ஞாயிற்றுக்கிழமை (நேற்று) கூறினபடி உபத்திரவகாலம் வரும்போது, எடுக்கப்படுதல் ஏன் சம்பவிக்கவில்லை என்று அநேகர் கேட்பார்கள். அப்பொழுது எடுக்கப்படுதல் ஏற்கனவே நிகழ்ந்திருக்கும். ஆனால் அவர்கள் அதை அறியாமலிருப்பார்கள். அது எவ்விதம் இருந்ததோ, அவ்விதமே இருக்கும். அது கடந்து சென்றதை அவர்கள் அறியமாட்டார்கள். பாருங்கள்?

**63-03-18 முதலாம் முத்திரை**

~ ~ ~ ~ ~

124. ஏனோக்குதான் மணவாட்டிக்கு முன்னடையாளமாய் இருந்தவன்.

ஏனோக்கு! நோவா உபத்திரவ காலத்திற்குள் பிரவேசித்து, துன்பப்பட்டு குடிகாரனாய் மரித்துப்போனான். ஆனால் ஏனோக்கு 500 வருடங்களாக தேவனுடன் சஞ்சரித்து, எடுக்கப்படுதலுக்கேற்ற விசுவாசம் கொண்ட வனாய் “தேவனைப் பிரியப்படுத்தினான்'' என்ற சாட்சியைப் பெற்றிருந் தான். அவன் நடந்து சென்று வானத்தைக் கடந்து, மரணத்தை ருசிபாராமல் தன் பரலோக வீட்டை அடைந்தான். அவன் மரிக்கவே யில்லை .

125. 'உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை' என்பதற்கு அது முன்னடையாளமாயிருக்கிறது. நித்திரையடைந்தவர்கள் வயது சென்ற காரணத்தாலும் சரீர நிலையின் காரணத்தாலும் நித்திரையடைந்தனர். அவர்கள் அங்கே மரித்தார்கள்; ஆனால் அவர்கள் மரிக்கவில்லை. அவர்கள்

நித்திரையடைந்திருக்கின்றனர். ஆமென். அவர்கள் நித்திரையடைந்திருக்கின்றனர்; அவர்கள் மரிக்கவில்லை. மணவாளன் வந்து அவர்களை நித்திரையினின்று எழுப்பவேண்டும். ஆம். 'உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில் தேவ எக்காளம் முழங்கும்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். உயிரோடிருக்கிற நாம் அவர்களோடுகூட எடுக்கப்பட்டு கர்த்தரை ஆகாயத்தில் சந்திப்போம்.''

126. ''மரணமடைந்த மற்றவர்கள் ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை.'' அவர்கள் நோவாவைப்போல் உபத்திரவகாலத்திற்குள் பிரவேசித்தனர்.

127. அது என்ன? ஏனோக்கைப் போல, நோவா ஏனோக்கை கவனித்துக் கொண்டேயிருந்தான் என்பதை நாம் அறிவோம். ஏனெனில் ஏனோக்கு காணப்படாமற்போனபடியால், நியாயத்தீர்ப்பின் சமயம் நெருங்கி விட்டது என்பதை அவன் அறிந்திருந்தான். நோவா பேழையின் அருகில் இருந்து கொண்டிருந்தான்.

128. ஆனால் நோவா வானத்திற்கு எடுக்கப்படவில்லை. அவன் ஒரு துண்டு மரத்தை உயர்த்தி, உபத்திரவத்தின் மேல் சவாரி செய்தான். உபத்திரவ காலத்தை அவன் கடந்து, பின்பு மரித்துப் போனான். பாருங்கள்? நோவா உபத்திரவ காலத்தைக் கடந்து போனான்.

129. ஆனால் ஏனோக்கு மரணமின்றி எடுக்கப்பட்டான். சபையானது நித்திரையடைந்தவர்களுடன்கூட

எடுக்கப்பட்டு கர்த்தரை ஆகாயத்தில் சந்திப்பதற்கு, ஏனோக்கின் சம்பவம் ஒரு முன்னடையாளமாக அமைந் துள்ளது. ஆனால் கைவிடப்பட்ட சபையோ உபத்திரவ காலத்திற்குள் பிரவேசித்தது. எனக்கு இதைத்தவிர வேறான்றும் செய்யத் தெரியவில்லை. ஏனோக்கு, மரணமடையாமல் எடுத்துக்கொள்ளப்பட்டான்.

**63-03-18 முதலாம் முத்திரை**

~~~~~

262. ஆனால் தூங்கிக் கொண்டிருந்த கன்னிகை (அதாவது புத்தியில்லாத கன்னிகை) எதையும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதைப் பாருங்கள். ஊ, ஊம். அது சரி. ஆம், அவர்கள் எண்ணெய் வாங்க முயற்சிக்கச் சென்றபோது அவர்கள் எண்ணெயை
~~~~~

வாங்கி விட்டதாக வேதம் கூறவில்லை என்பது நினைவிருக்கட்டும்.

263. அவர்கள் எண்ணெய் வாங்க முயன்றுக் கொண்டிருந்தபோது, ஒரு சத்தம் உண்டானது. என்ன நேர்ந்தது? அந்த சத்தத்தைக் கேட்டவுடன், தூங்கிக் கொண்டிருந்த கன்னிகைகள் அனைவரும் எழுந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினர். எண்ணெய் வைத்திருந்த புத்தியுள்ள கன்னிகைகள் கலியாண விருந்துக்குச் சென்றனர். நான் கூறுவது சரியா? (சபையார் 'ஆமென்' என்கின்றனர் - ஆசி)

264. மற்றவர்கள் உபத்திரவ காலத்திற்கென்று விடப்பட்டனர். "அங்கு அழுகையும் ஓலமும் பற்கடிப்பும் உண்டாகும்.'' அவர்கள்தான் சபை (church). மணவாட்டியல்ல; சபை.

265. மணவாட்டி உள்ளே சென்றாள். மணவாட்டிக்கும் சபைக்கும் முழு வித்தியாசமுண்டு. ஆம், ஐயா. ஊம்... ''அவர்கள் கலியாண விருந்துக்குச் சென்றனர்" ஓ... கவனி... மகனே (சகோதரன் பிரான்ஹாம் தன் கரங்களை ஒரு முறை கொட்டுகிறார் -ஆசி).

## 63-03-17E ஏழு சபையின் காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையேயுள்ள பிளவு

~ ~ ~ ~ ~

24. வெளிப்படுத்தின விசேஷம் 4-ம் அதிகாரத்தில் சபை எடுக்கப்பட்ட பின்னர், நடைபெறவிருக்கும் சில சம்பவங்கள் கூறப்பட்டுள்ளன. சபையானது வெளிப்படுத்தின விசேஷம் 3-ம் அதிகாரத்தில் மேலே செல்லுகிறது. சபையானது வெளிப்படுத்தின விசேஷம் 19-ம் அதிகாரம் வரை திரும்பி வருவதில்லை. பாருங்கள்? ஆகையால்

சபையானது உபத்திரவ காலத்தில் பங்கு கொள்வதில்லை. இந்தக் கருத்து, நான் இது வரை அறிந்துள்ள எல்லா போதகர்கள் கொண்டிருக்கும் கருத்துக்கு முரண்பட்டது. நான் அவர்களுடன் இணங்காமல் இருக்க வேண்டும் என்பதற்கல்ல. நான் உங்கள் சகோதரனாய் இருக்க விரும்புகிறேன். ஆதலால் நான் உண்மையென்று திண்ணமாக அறிந்திருப்பதை உங்களுக்குப் போதித்தாக வேண்டும். சபையானது உபத்திரவ காலத்திற்கு முன் எடுக்கப்படாவிட்டால், மற்றைய சம்பவங்களை அதனுடன் என்னால் பொருத்த இயலவில்லை. நீங்கள் பாருங்கள்? சபை உபத்திரவக் காலத்துக்கு முன்பு செல்கின்றதோ, அல்லது பின்பு செல்கின்றதோ, எவ்வாறாயினும் நான் அதனுடன் செல்ல விரும்புகிறேன். அதுதான் முக்கியமான காரியமாகும்.

25. இவைகளை நாம் யூகிக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட காரி யங்களை, கல்வியறிவு இல்லாத நான், பழைய ஏற்பாட்டின் சம்பவங்களை முன்னடையாளமாகக் கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கிறேன். பழைய ஏற்பாட்டில் என்ன நிகழ்ந்தது, அது எப்படி இருக்கின்றது என்பது புதிய ஏற்பாட்டில் நிகழும் சம்பவத்திற்கு நிழலாக அல்லது முன்னடையாளமாக அமைந்துள்ளது என்று நான் காணும்போது, இந்த புதியதைக் குறித்து கருத்து என்ன என்பதை நான் உடையவனாயிருப்பேன். பாருங்கள்? நோவா உபத்திரவம் உண்டாவதற்கு முன்னே பேழைக்குள் சென்றான். பாருங்கள்? அது ஓர் முன்னடையாளம். ஆனால் நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் முன்பே ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான். பாருங்கள்? அழிவிற்குரிய ஒரு சிறிய

உபத்திரவம்கூட தொடங்குவதற்கு முன்பே லோத்து சோதோமிலிருந்து வெளியேற்றப்பட்டான். ஆனால் ஆபிரகாம் உபத்திரவ காலத்துடன் எப்பொழுதுமே சம்பந்தப்படவில்லை. பாருங்கள்? முன்னடையாளங்கள்.

## 63-03-17E ஏழு சபையின் காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையேயுள்ள பிளவு

~~~~~

சகோதரரே, நான் நினைப்பது என்னவெனில், இங்குள்ள இந்த சபையைப் போல என் ஊழியத்தில் என் புத்திக்கு எட்டின் வரைக்கும், நான்கு காரியங்கள் செய்யப்படலாம். ஒருக்கால் அது நான்கு காரியங்களாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அந்த ஒரு நோக்கத்தையே என்னால் எண்ணிப் பார்க்க முடிகிறது. நதிக் கரையில் என்னோடு பேசின அவர்... அது
~~~~~

மாத்திரமே புறஜாதி சபைக்கு விடப்பட்டிருக்குமானால்- அதை நாம் சபையைக் குறித்து எழுதப்பட்டுள்ள வெளிப்படுத்தின விசேஷம் ஒன்று, இரண்டு, மூன்று அதிகாரங்களில் உணருகிறோம். சபையானது 4-ம் அதிகாரத்தில் மேலே எடுத்துக்கொள்ளப்படுகிறது. அது 19-ம் அதிகாரம் வரையிலும் திரும்பி வரவில்லை. அது உபத்திரவ காலத்துக்குப் பிறகு, உபத்திரவ காலத்தின் போது தேவன் யூதர்களுக்கு அழைப்பு கொடுக்கிறார். அது உண்மை.

ஒரு துளி மழை பூமியில் விழும் முன்பு ஏனோக்கு மேலே சென்றது போல. அவன் போய்விட்ட பிறகு உபத்திரவம் தொடங்கினது. பாருங்கள்? உபத்திரவம் தொடங்குவதற்கு முன்பு நோவா பேழைக்குள் சென்றுவிட்டான். உபத்திரவம் தொடங்குவதற்கு முன்பு

லோத்து சோதோமை விட்டு வெளியேறிவிட்டான். பாருங்கள்? அவ்வாறே உபத்திரவ காலத்துக்கு முன்பு சபையானது போய்விட்டிருக்கும்.

உபத்திரவ காலத்தின் போது புத்தியில்லாத கன்னிகைகள் வலுசர்ப்பத்தினால் வேட்டையாடப்படுவார்கள் (அது வாயிலிருந்து தண்ணீரை ஊற்றிவிட்டது - தண்ணீர் என்பது திரளான ஜனங்களை, சேனைகளைக் குறிக்கும்). அது தேடி, அவளுடைய சந்ததியான மற்றவர்களைக் கண்டுபிடித்து, அவர்களைக் கொன்றுபோடும். அது உபத்திரவ காலத்தில் நடக்கும். ஆனால் சபையோ வீட்டுக்குச் செல்லும். அது நாளை நடக்குமானால், இன்று நாம் பணி செய்வதை அது தடுக்காது. இன்றைய நாளை நாம் எண்ணிப் பார்ப்போம்.

~ ~ ~ ~ ~

143. சபையானது உபத்திரவ காலத்தினூடாகச் செல்கிறது என்று ஒரு இடத்திலும் இல்லை. கிறிஸ்துவின் இரத்தம், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் பூசுதலின் முழுமை, எல்லா பாவத்தையும் சுத்திகரிக்கிறது. நான் ஏன் சுத்திகரிக்கப்பட வேண்டும்? நாம் ஒவ்வொரு நாளும் சுத்திகரிக்கப் படுகிறோம். உபத்திரவமே கிடையாது. கவனியுங்கள். பரிசுத்த யோவான் 5:24-ல் இயேசுவானவர் என்ன கூறினார் என்பதை கவனியுங்கள். "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்.'' ஆமென்.

144. ஏனோக்கு, தீர்க்கதரிசி! யூதர்களுக்கும், மீந்திருப்பவர்களுக்கும், தேவனுடைய ஊழியக்காரன் நோவா ஒரு பாவனையாய் இருக்கிறான். கர்த்தருடைய வருகையைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்த மகத்தான தீர்க்கதரிசியாகிய ஏனோக்கு மறுரூபமாக்கப்பட்டான். ஜலப்பிரளயத்திற்கு முன்னதாகவே எடுத்துக் கொள்ளப்பட்டான். பூமியின் மேல் வித்தை பாதுகாப்பதற்காக ஜலப்பிரளயத்தினூடாக நோவா கொண்டு செல்லப்பட்டான்.

145. இப்பொழுது தேவன் அவருடைய வார்த்தையை அவருடைய தீர்க்கதரிசியாகிய நோவாவின் மூலமாக அனுப்பினார். அப்பொழுது நோவாவும், ஏனோக்கும் தீர்க்கதரிசனம் உரைக்கத் துவங்கினர். பின்னர், ஜலப்பிரளயம் தாக்க துவங்குவதற்கு முன்னர் என்ன சம்பவித்தது? ஏனோக்கு மேலே

சென்றான். நோவா ஜலப்பிரளயத்தினூடாகச் சென்றான். புரிகின்றதா? ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான். ஏனோக்கை கவனித்துக் கொண்டிருப்பதுதான் நோவாவின் அடையாள மாய் இருந்தது. ஏனோக்கு காணப்படாமற்போனபொழுது, ஜலப்பிரளயம் சமீபமாய் இருந்தது என்பதை நோவா அப்பொழுது அறிந்து கொண்டான். ஏனென்றால் அவன் தன்னுடைய கண்ணை ஏனோக்கின் மேல் வைத்துக் கொண்டிருந்தான்.

## 62-05-31 தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையேயுள்ள போராட்டம்

~ ~ ~ ~ ~

164. இங்கே சில நாளுக்கு முன்பாக யாரோ ஒருவர் எனக்கு கடிதம் எழுதி என்னிடம் 'சபை உபத்திர காலத்தினூடாக செல்லும் என்று நீங்கள்

விசுவாசிக்காவிடில், வெளிப்படுத்தல் 13ஐக் குறித்தென்ன, ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தம் நான் ஆச்சரியப்படுகிறேன் மற்றும் தங்கள் சாட்சியினாலே எப்படி அவர்கள் ஜெயங்கொண்டார்கள்?'' என்று கேட்டார். இந்த கேள்வியை அந்த நபர் கேட்டார். வெளிப்படுத்தலின் முதல் மூன்று அதிகாரங்கள் சபையின் காலத்தில் இருக்கின்ற சபையைக் குறித்து கூறுகின்றன என்று நீங்கள் உணருகிறீர்களா? அது உபத்திரவத்தின் காலமாகும், சபையின் காலம் அல்ல; 4வது அதிகாரத்தில் சபை எடுத்துக் கொள்ளப்பட்டு மேலே செல்கிறது, 19ஆம் அதிகாரத்தில் அது இயேசுவுடன் திரும்பி வரும் வரையில் அது மறுபடியுமாக வருவதே இல்லை. அது சரியே. அது உபத்திரவ காலத்திலாகும், சபையுடன்

அதற்கு எந்த விதமான சம்பந்தமும் கிடையாது.

## 62-05-27 கேள்விகளும் பதில்களும் COD #15

~~~~~

131. ஓ! நீங்கள் இதை புரிந்து கொள்கிறீர்களா? பாருங்கள், அது முதலாவது அவளுடைய சிந்தனையை தாக்குகிறது. அவளுடைய மாம்ச கர்ப்பப்பையில் இயற்கையான செயல் சம்பவிக்குமுன், ஆவிக்குரிய செயல் முதலில் சிந்தனையில் சம்பவித்து, பின்பு ஆவியானது மற்ற கிரியைகளை முடிக்கிறது. ஓ. உண்மையான ஆவிக்குரிய பிறப்பு சம்பவிக்குமுன் தேவவார்த்தையானது உங்களுடைய சிந்தனையில் முதலாவது நுழைய வேண்டியதாயுள்ளது; இதை விசுவாசியுங்கள். "என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை
~~~~~

விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், (அல்லது உபத்திரவ காலத்திற்குள் வராமல்) மரணத்தை விட்டு நீங்கி, ஜீவக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன்” என்று இயேசு கூறினார்.

## 62-03-18E உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து #2

~~~~~

103. வரப்போகிற இந்த மகா உபத்திரவ காலத்திலே அங்கே லட்சக்கணக்கான புறஜாதியார் மரித்துப் போவார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அந்த புறக்கணிக்கப்பட்ட மணவாட்டி, ஸ்திரீயின் வித்தாகிய அம்மீதியாயிருக்கிறவர்கள், நித்திரை செய்யும் கன்னியர் அவர்கள்.
~~~~~

அவ்வுபத்திரவத்தின் வழியாக அவள் கடந்து செல்லுவாள். இவ்வெழுபது வாரங்கள் எவ்வாறு மிகவும் தெளிவாக இருக்கிறதோ அதைப் போலவே அதுவும் இருக்கிறது. அவர்கள் அதின் வழியாக கடந்து செல்லுவார்கள். எனவே இது வரையிலும் நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெறாதிருப்பின், உங்களால் இயன்ற அளவு விரைவாக அதைப் பெற்றுக்கொள்ளுங்கள். நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம்.

**61-08-06 தானியேலின் எழுபது வாரங்கள் #3**

~~~~~

41. இப்பொழுது, சபைக்காலங்கள் முடிவுற்ற பிறகு, உட னேயே 4ம் அதிகாரதில் யோவான் மேலே எடுத்துக் கொள்ளப்படுகிறான். மேலே எடுத்துக்கொள்ளப்பட்ட யோவான், அதற்கு முன்பாக சபைக்காலங்கள்
~~~~~

முழுவதையும் கண்டான். அந்த இடத்தில் தான் நான் ஒரு வினாடி நிறுத்திவிட்டு புறஜாதிகளின் காலத்தில் ஏதோ ஒரு மகத்தான, பெரிய, வல்லமையான காரியம் நடைபெற வேண்டும் என்று அநேகர் எதிர்பார்த்திருக்கிறார்களே, அவர்கள் தவறாயிருக்கிறார்கள் என்று கூறிட நான் விரும்புகிறேன். சபைக் காலங்களைப் பற்றியும், புறஜாதிகளின் ஆளுகையில் நடைபெறப்போகிற அனைத்துக் காரியங்களைப் பற்றி உள்ள விஷயங்களும், வெயிப்படுத்தின விசேஷம் 1முதல் 3முடிய உள்ள அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிறகு சபையானது மகிமையில் எடுக்கப்படுகிறது. அதன்பிறகு 19ம் அதிகாரம் முடிய உள்ள காரியங்களெல்லாம் யூத இனத்திற்கு நேரிடுகிற காரியங்களாகும். சபையானது உன்னதத்திற்கு எடுக்கப்பட்ட பிறகு

உள்ளதாகும். இவையெல்லாம் அப் பொழுது மகா உபத்திரவ காலமாகும், அப்பொழுது, புறஜாதிகள் அவர்கள் வெட்டப்படுவதைக் தவிர வேறு ஒன்றும் நடைபெறப் போவதில்லை. எனவே நாம் அவைகளை எடுத்துக் கொண்டு பார்ப்போமாக.

**61-07-30M தானியேலுக்கு காபிரியேல் அறிவுறுத்தியவைகள் #1**

~ ~ ~ ~ ~

158. யூதர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் அதே நிமிடம் புறஜாதி சபையானது எடுக்கப்பட்டிருக்கும். பிறகு இங்குள்ள புறஜாதிகள் மேல் வாதைகள் விழும், உபத்திரவகாலம் வரும்.

159. பெரிய போதகர்கள் என்று சொல்லப்படக்கூடிய மனிதர் கள் எல்லாம் சபையானது உபத்திரவ காலத்தின் வழியாகச் செல்லும், என்று

இவ்வேதத்தைப் படித்துக் கொண்டே எவ்வாறு கூறுகிறார்கள்! ஆனால் வேத வாக்கியங்களிலோ அவ்வாறு கூறக்கூடிய ஒரு வசனம் கூட இல்லை. அவர்களுக்கு ஒன்று கூட இல்லை.

160. சமீபத்தில் ஒரு மனிதன் என்னிடத்தில் வந்து, ''சகோதரி மெக்ஃபெர்சன், சபையானது உபத்திரவ காலத்தின் வழியாகச் செல்லும், ஏனெனில், நாம் அக்காலத்தில் பிரகாசிக்கிற வெளிச்சங்களாக இருப்போம் என்று போதித்தார்கள்'' என்று கூறினார். அக்காலத்தில் அது இஸ்ரவேலரைத் தான் குறிக்கும், புறஜாதிகளையல்ல. புறஜாதி சபையின் காலம் ஏற்கெனவே முடிந்து போய்விட்டிருக்கும். அவர்கள் உபத்திரவ காலத்தின் வழியாக செல்ல வேண்டியதிருக்காது. வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து வெள்ளத்தை ஊற்றிவிட்டு, மீதியானவர்களோடு யுத்தம் செய்யப்

புறப்பட்டுப்போனது (அது 17ம் அதிகாரம்) நித்திரை செய்யும் கன்னியர்... உண்மையான சபையானது ஏற்கெனவே போய்விட்டிருக்கும். அந்தக் காலத்தில் 'அந்த கடைசி வாரத்தில்' சபையானது கலியாண விருந்துக்கு போய் விடும். அப்போது கலியாண விருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும். அப்போது தான் உபத்திரவ காலமானது துவங்கும், அப்போது வெட்டுக்கிளிகளும் உபத்திரவங்களும் சபைகள் மேல் எழுப்பும். பிறகு முடிவில் 19ம் அதிகாரத்தில் அவள் தன்னுடைய மணவாளனுடன் வருவாள் (அல்லேலூயா), இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தாவாக, இரத்தத்தில் தோய்த்த வஸ்திரம் தரித்தவராய் வருவார், அவரோடு பரலோக சேனைகளும் வெள்ளைக்குதிரைகள் மேல் ஏறி வர, அங்கே அவள் ஆயிரமாண்டு

அரசாட்சியில் தன் ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளவருகிறாள். ஆமென்! ஓ!

## 61-07-30M தானியேலுக்கு காபிரியேல் அறிவுறுத்தியவைகள் #1

~ ~ ~ ~ ~

இப்பொழுது முடிவாக, ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள், ஏழு வாதைகள், மூன்று ஆபத்துக்கள், சூரியனில் நிற்கிற ஸ்திரீ, சிவப்பான வலுசர்ப்பம் ஆகியவைகள் இந்தக் காலங்களுக்குள், மகா உபத்திரவ காலத்தின் வேளையில் வருகின்றன. இதை மறக்க வேண்டாம். இவைகள் யாவும் இந்த காலத்தில் சம்பவிக்கின்றன. ஆனால் இதோ இங்கேதான் இந்த ஆறுவிதமான நோக்கங்களுக்காக அவன் வருகிறான். அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? கர்த்தரை நேசிக்கிறவர்களுக்கு என்னே ஒரு மகிமையான வேளையானது வைத்து

வைக்கப்பட்டிருக்கிறது. நான் உங்களுக்குக் கூறுவது என்னவென்றால், நண்பர்களே! நீங்கள் இதை இழந்து போவது உங்களால் தாங்கிக் கொள்ள முடியாததாகும். நீங்கள் என்ன செய்த போதிலும், அதை இழந்துபோகவே கூடாது. அதைப் பற்றி உறுதியாயிருங்கள்.

## 61-07-30E தானியேலை காபிரியேல் சந்தித்ததன் ஆறுவிதமான நோக்கங்கள் #2

~~~~~

194. சற்று நேரம் கழித்து உபத்திரவ காலத்து பரிசுத்தவான்கள் மேலே வருவதைக் குறித்து கவனிக்கிறோம். அப்பொழுது முழுவதும் மீண்டும் அக்கினிமயமாக இருப்பதை காண்கிறோம். நீங்கள் அறிவீர்களா? அதை நீங்கள் வாசிக்க விரும்புகிறீர்களா? இப்பொழுது நாம் வெளிப்படுத்தின விசேஷம் 15ம் அதிகாரம் 2ம் வசனத்தை
~~~~~

எடுத்துக்கொள்வோம், அங்கே மீண்டும் அக்கினி மயமான வெண்கலம் போன்றுள்ளதைக் குறித்து பார்க்கலாம்.

"பின்பு, வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளமாகிய கடைசியான ஏழு வாதைகளையுடைய ஏழு தூதரைக் கண்டேன், அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது"

வெளி.15:1

195. இப்பொழுது தேவனுடைய கோபம் என்பதைப் பற்றி கவனியுங்கள்.

"அன்றியும், அக்கினி கலந்த கண்ணாடிக் கடல் போன்ற ஒரு கடலையும், (இப்பொழுது கவனியுங்கள்) மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள்

தேவசுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன்.

'அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும்... பாடி...''

வெளி. 15:2-3

196. ஓ, அதை நீங்கள் கண்டீர்களா? ''உபத்திரவ காலம்'' ஓ! நீங்கள் வீட்டுக்குத் திரும்பிப்போக அவசரமாயுள்ளீர்களா? (சபையார் "இல்லை'' என்று பதிலளிக்கிறார்கள் - ஆசி.). நல்லது, கவனியுங்கள். இங்கு ஒரு காரியத்தை நாம் கவனிப்போம்.

197. எவ்வாறு நாம் வருகிறோம்? புறஜாதி சபையாகிய நாம் இந்த திருவசனத்திற்கு இக்கண்ணாடிக் கடலண்டையில், தண்ணீராகிய திருவசனத்தண்டையில் வந்து, அது

எழுதப்பட்டிருக்கிற வண்ணமாக அதை அங்கீகரித்து வரவேண்டும். அது சரிதானே? அப்பொழுது பலியானது ஏற்றுக்கொள்ளப்பட்டு, உள்ளுக்குள் ளாக பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுகிறது; அந்தக் காலத்திற்குரிய வெளிச்சத்தினால் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

இதிலிருந்து ...... பரிசுத்த ஸ்தலத்திலிருந்து இதற்குள் வருகிறது. வந்து நட்சத்திரம் இருக்கிற ஸ்தலத்திலிருந்து புறப்பட்டு இங்கே வருகிறது. அதைப் புரிந்துகொண்டீர்களா?

198. இந்தக் காலத்தின் முடிவில், வெண்கலக்கடல் தொட்டியை யோவான் காண்கையில், அது பளிங்கைப் போல் தெளிவாயிருந்தது என்பதைக் கவனியுங்கள். அதற்கு என்ன அர்த்தம்? வார்த்தையானது பூமியினின்றும் எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டது; சபையானது

எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது, எனவே இனி அதில் இரத்தம் இல்லை; சபைக்காலமானது முடிவடைந்து விட்டது, எனவேதான் அது பளிங்கைப்போல் தெளிவாய் இருந்தது.

199. இப்பொழுது வெளிப்படுத்தின விசேஷம் 15ம் அதிகாரத்தில், ஸ்திரீயின் சந்ததியாகிய மீதியானவர்கள் உபத்திரவ காலத்து பரிசுத்தவான்கள் ஆவர்; அவர்கள் உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து செல்லுகிறார்கள், அவர்கள் இந்தக் கடலின் மேல் நின்று கொண்டிருப்பதாகக் காணப்பட்டார்கள். அது அக்கினிமயமாக, இரத்தத்தால் நிறைந்து, சிவப்பான தீ நாவுகள் உள்ளதாக, தேவ அக்கினியானது எரிந்து கொண்டிருந்தது. பாருங்கள். அவர்கள் ரோமாபுரியாகிய மிருகத்தின் மேலும், அவனது இலக்கத்தின் மேலும், அவனது பெயரின் எழுத்துக்களின் மேலும், அவனது சொரூபமாகிய

சபைகளின் சமஷ்டி அமைப்பின் மேலும் ஜெயங் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதைவிட்டு வெளியே வந்து விட்டார்கள். இந்த உபத்திரவகாலத்து பரிசுத்தவான்களாகிய இக்குழுவினரான மக்களை வெளியே கொணருவதற்காக, இஸ்ரவேலுக்காக தோன்றவிருக்கும் அந்த இரு தீர்க்கதரிசிகளாகிய மோசேயும் எலியாவும் செய்கிற பிரசங்கத்தின் மூலமாக அவர்கள் கொண்டுவரப்படுவார்கள்.

200. பாருங்கள், இப்பொழுது சபையானது எடுத்துக்கொள்ளப் பட்டாகிவிட்டது. இது நடக்கையில் கிறிஸ்துவின் மனைவியானவள் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறாள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உபத்திரவ காலமானது... நகரத்தினுள் தனது இராஜாக்களையும், அவர்களுடைய எல்லா மகிமைகளையும் கொண்டு

வந்திருக்கிறாள். நாம் வெளிப்படுத்தின விசேஷம் 22ம் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும்போது நீங்கள் அதைக் காணலாம். இதை நீங்கள் எழுதிக் குறிப்பெடுத்து வைத்துக்கொண்டு பார்த்துக்கொண்டே வந்தால், அதைப்பற்றி நாம் பார்க்கையில், நமக்கு அதின் அர்த்தம் என்ன என்பதை கண்டுகொள்ளலாம். அதனுடைய உன்னதமான இடங்களைத் தொடுவதற்கு நமக்கு நேரம் இல்லை. பிறகு, ஏதாவது ஒரு நாளில், ஒருவேளை கர்த்தருக்கு சித்தமானால், அதைப்பற்றி பேசுவதற்கு நமக்கு ஏராளமான தருணம் உண்டாயிருக்கும்.

201. இப்பொழுது எழும்பிவந்த உபத்திரவ காலத்து பரிசுத்தவான்கள், மகா உபத்திரவ காலத்திற்குள் கடந்து வந்திருக்கிறார்கள். சபையானது உபத்திரவ காலத்தினுள் போகாது. அவர்கள் ஏற்கனவே மகிமையில் இருக்கிறார்கள்

என்பதைக் காண்கிறீர்களா? இதோ இங்கே உபத்திரவ காலத்து பரிசுத்தவான்கள் பரிசுத்த மாக்கப்பட்டவர்களாய் .... என்னுடையதும் உங்களுடையதுமான தவற்றினால் அவர்கள் ஒருபோதும் வசனத்தை கேட்காதவர்களாய் இருந்தார்கள். அவர்கள் கேட்டிருந்தும், அதை அவர்கள் புறக் கணித்திருந்தால், அவர்கள் நரகத்திற்குத்தான் போவார்கள், புறம்பான இருளில் தள்ளப்பட்டிருப்பார்கள், ஏனெனில் அவர்கள் வசனத்தை புறக்கணித்தபடியினால் இப்படியாகி இருக்கும். ஆனால் அவர்கள் ஒருபோதும் கேட்டேயிராவிட்டால், அப்பொழுது தேவன் நீதியுள்ளவராயிருக்கிறார்; உபத்திரவ கால மானது அவர்களுக்கு வருகிறது.

202. ஒரு நிமிடம் கவனியுங்கள், யோசித்துப் பாருங்கள். அதே

வார்த்தையினால்தான் இவர்களும் கழுவப்பட்டுள்ளனர். இவர் களுக்கும் அதே பலிபீடம்தான், அதே கண்ணாடிக் கடல்தான், அதே திருவசனம்தான். வெளிப்படுத்தின விசேஷம் 2:5, அல்ல, வெளிப்படுத்தின விசேஷம் 15:2 முதல் 5ம் வசனங்கள் முடிய. ஒரு நிமிடம் கவனியுங்கள். நாம் அவர்களிடத்திற்கு தேவவசனத்தை எடுத்துக்கொண்டு போகவில்லை; அதனால்தான் அவர்கள் இவ்வித நிலையில் இருக்கின்றனர். அதற்காக நாம் பொறுப்பாளிகளாக்கப் படப்போகிறோம். எனவே நாம் அனைவரையும் பிடித்துக்கொள்ள இயலாமல் இருக்கிறது. இந்த காலத்தில் உள்ள சத்தியத்தையுடைய சபையானது அப்படி செய்ய இயலாது. அவர்கள் யாவரும் உபத்திரவ காலத்திற்குள் போகிறபடியால், கடந்துபோன சபைக் காலங்களில் மரித்த பரிசுத்தவான்கள்

அல்ல இவர்கள், ஏனெனில் இவர்களைப் பற்றி "மகா உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்'' என்று கூறப்பட்டுள்ளது. மகா உபத்திரவ காலமானது, சபையானது பரம வீட்டிற்கு எடுக்கப்பட்ட பிறகு எதிர்வரும் காலத்தில் நிகழப் போகும் காரியமாகும்.

## 61-01-08 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #3

~~~~~

176. இவ்வார்த்தையைக் கேட்கிற ஒவ்வொருவருக்கும்; யோவான் அவருக்காக பிரதிநிதியாக நின்றான். ஆமென். யோவான் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திற்கு பிரதிநிதியாக இருந்தான். வார்த்தைக்கு சாட்சியாக இருந்தான், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு ஒரு சாட்சியாக அவன் இருந்தான். கிறிஸ்துவோடு தனிப்பட்ட முறையில் ஐக்கியம் கொண்டு இருந்தான். அவன்
~~~~~

சபை முழுவதற்கும் எடுத்துக்காட்டாக விளங்கினான். கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு, அவரை அதே அடிப்படையில் ஏற்றுக் கொள்கிற ஒவ்வொரு மனிதனோ, பெண்ணோ, வாலிபனோ, வாலிபப் பெண்ணோ, யாராயிருந்தாலும் சரி, ஒருநாளில் அவர்களை அவர் கூவி அழைப்பார். “இங்கே ஏறிவா'' என்று. அவர்கள் உபத்திரவக் காலத்திற்கு முன்பாக எடுத்துக் கொள்ளப் படுவார்கள். உபத்திரவ காலமானது இன்னும் ஆரம்பிக்கவில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

**60-12-31 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #1**

~~~~~

171. அது இன்னொரு காரியம்; மகா உபத்திரவ காலத்திற்கு முன்பாக சபையானது மேலே
~~~~~

எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது என்பதற்கான நிரூபணமாக அது இருக்கிறது. பார்த்தீர்களா? ஏன்? அவர் மகிமையில் இங்கே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார், சபையானது பூமியை விட்டுப் போய்விட்டது. பிறகு, அவர் உபத்திரவ காலத்தில் வருகிறார். நான் எப்பொழுதும் அவ்வாறு தான் கூறி வந்திருக்கிறேன்.

172. நோவாவின் நாட்களில், ஒரு துளிமழை கூட பெய்யும் முன்னர், நோவா பேழைக்குள் போய்விட்டான். சோதோமில் அக்கினி விழுவதற்கு முன்னர், லோத்து சோதோமைவிட்டு வெளியேறி விட்டான். அணு குண்டு விழுவதற்கு முன்னர் சபையானது மகிமைக்குள் பிரவேசித்துவிடும். அதுசரிதான். அணுகுண்டு விழுவதற்கு முன்னர் அவ்வாறு நடக்கும்.

173. "முதலில் விழுந்ததைக் குறித்து என்ன?' என்று கேட்கலாம். அது அஞ்ஞானிகள் மேல்தான் விழுந்தது, கிறிஸ்தவர்கள் மேல் அல்ல .

174. இப்பொழுது கவனியுங்கள். ஓ! அவர் தம்முடைய கிரியை பூமியில் முடித்தார், அவர் தம்முடைய சபையை பூமியை விட்டு எடுத்துவிட்டு, இப்பொழுது அவர் நியாயத்தீர்ப்பை அனுப்புகிறார். உலகம் அவரைப் புறக்கணித்தது. அவர் தம்முடைய நியாயத்தீர்ப்பை அனுப்பினார். அவரும் அவருடைய சபையும் மகிமைக்குள் போய்விட்டனர்.

## 60-12-31 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #1

~ ~ ~ ~ ~

யாவரும் கன்னிகைகள் தான். இதோ இங்கே அந்த சிறிய

மீதியாயிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் வெட்டப் படும்வதில் விழும் கழிவுத்துண்டுகள் அல்ல இவர்கள். ஓ, இல்லை. அப்பெண்மணி அதை பத்திரமாக எடுத்துவைத்து வைக்கிறாள், அதை அவள் வேறு எதற்காவது உபயோகிக்க முடியும். பாருங்கள்? ஆனால் சபைக்காலத்தில் இங்கே அது உபயோகப்படப் போகிறதில்லை, அங்கே வெட்டியெடுக்கப் பட்ட சபைதான் உபயோகிக்கப்படும். மீதியாயிருக்கிற அவர்கள் உபத்திரவ காலத்தினூடே செல்லுகிறபடியினால், அவர்கள் நியாயத்தீர்ப்பில் நிற்க வேண்டியுள்ளது. அதை இப்பொழுது புரிந்து கொண்டீர்களா?

இங்கே சபையானது பரம் வீட்டிற்கு போகின்றது. இதோ இங்கே மீதமாக விடப்பட்டிருக்கிற மீதியாயிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். இங்கே தான் சீயோன்

மலையின் மேல் நிற்கிற யூதர்களாகிய இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அது மூன்றுவிதமான மணவாட்டிகள் அல்ல. அது தானே மணவாட்டி, அடுத்து மீதியாயிருக்கிறவர்கள்; இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள். சரியாக அதுதான். யோவான் அங்கே பரிசுத்த ஆவியின் உணவைத் தவிர வேறு எதையும் புசித்துக் கொண்டிருக்கவில்லை. எனவே அவன் சரியான நிலையில் தான் இருந்தான். அவனிடத்தில் எந்தவித பழுதும் காணப்படவில்லை என்று நான் கருதுகிறேன். பாருங்கள்? அவர்கள் அதோ அங்கே இருக்கிறார்கள்.

**60-12-11M பத்து கன்னிகைகளும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும்**

~ ~ ~ ~ ~

256. இப்பொழுது இந்த பெரிய சோதனையானது'', பூமி முழுவதின் மேலும் சோதிக்கும்படியான வரப்போகிற அந்த சோதனைக்காலமானது, உபத்திரவ காலத்திற்குள் செல்லுகிறது. சில நிமிடங்களுக்குள் அதைப்பற்றிப் பார்ப்போம். இது சோதனைக் காலத்திற்குள் செல்லுகிறது. வெஸ்லியின் காலத்தில் இந்த உபத்திரவமானது வரவில்லை. எனவே, எந்தக் காலத்தில் நாம் இருக்கிறோம்? வைக்கப்பட்ட இந்த 'வாசலானது'' என்னவா யிருக்கிறது? வெஸ்லியின் காலத்திற்கும் அதற்கடுத்த காலத்திற்கும் இடைப்பட்ட காலமாக இருக்கிறது. அங்கே சபையானது ஏற்கனவே லவோதிக்கேயா சபைக்காலத்திற்குள் முன்னோக்கிச் சென்றுவிட்டது. இடைப்பட்டதாக இருக்கிற இந்த சிறிய காலத்தில், கடந்த 35, 40 ஆண்டுக்காலத்தில், உள்ளே பிரவேசிக்

கிறதற்காக மக்கள் முன்பாக, மக்களுக்கென ''திறந்த வாசலானது" வைக்கப்பட்டுள்ளது; தேவன் மீதியாயிருக்கிற அச்சிறு கூட்டத்தை எடுத்து முத்தரித்து விடுகிறார். மற்றவர்களோ அனலுமின்றி குளிருமின்றி வெதுவெதுப்பாகப் போய்விடுகிறார்கள். தேவன் அவர்களை தன் வாயிலிருந்து வாந்தி பண்ணிப் போட்டுவிடுவார் கிரியையானது காலத்திற்கு முன்பாகவே விரைந்து செய்து முடிக்கப்பட்டு, சபையானது மேலே எடுக்கப்படும், அழிவுக்காக அந்திகிறிஸ்து வருகிறான். இது மிகவும் பரிபூரணமாக இருந்து, முழு வேதத்தோடும் சுற்றிலும் நன்கு பொருத்தமாக அமைந்துள்ளது. சரி, இப்பொழுது.

257. அப்பொழுது, நித்திரை செய்யும் கன்னியர் தோன்றுவதும் கூட ஏற்படுகிறது. சபைக்காலங்களின் இறுதிக்கட்டமானது,

பெந்தெகொஸ்தேயின் முதல் பாகத்திற்கு நகர்ந்து செல்லுகிறது. ஏனெனில் அவர்கள் மகா உபத்திரவத்திற்குள் செல்வார்கள். அது வெஸ்லியின் காலத்தில் வரவில்லை.

## 60-12-10 பிலதெல்பியா சபையின் காலம்

~~~~~

312. எப்பொழுது சுவிசேஷமானது யூதர்களுக்குத் திரும்பிச் செல் கின்றது? புறஜாதிகளின் காலம் முடிவடைந்த பிறகு, சுவிசேஷ மானது யூதருக்கு திரும்பிச் செல்ல ஆயத்தமாயிருக்கும். இங்கே தானே, நடைபெறப் போகிற ஒரு காரியத்தை நான் உங்களுக்கு முன்னுரைக்க முடியும். இந்நாளில் தானே அது நடைபெற ஆயத்தமாக இருக்கிறது. நாம் அதை சபைக் காலத்தில் பார்க்கிறோம். நடைபெறவிருக்கிற அதற்காக தயாராயிருக்கிற அந்த மகத்தான காரியம், வெளிப்படுத்தின விசேஷம் 11ம்
~~~~~

அதிகாரத்திலுள்ள அவ்விரு தீர்க்கதரிசிகளாகிய எலியா, மோசே ஆகியோரை யூதர்களுக்காக திரும்பக் கொண்டு வருகிறது. நாம் அதற்காக ஆயத்தமாயிருக்கிறோம். எல்லாமே கிரமமாக, ஆயத்தமாக இருக்கிறது. இந்த புறஜாதிகளுக்கான செய்தியானது, முதலில் புறஜாதிகளண்டைக்கு யூதர்கள்தான் கொண்டு வந்த தாகும். புறஜாதிகள் அதை மீண்டும் யூதர்களிடம் எடுத்துச் செல்வார்கள்; எடுத்துக் கொள்ளப்படுதல் அப்பொழுது வரும்.

313. மகா உபத்திர காலத்திற்கு பிறகு உள்ள இந்த வருகையைப் பற்றி மனதில் வையுங்கள். மகா உபத்திரவ காலத்திற்குள் சபையானது போவதில்லை. வேதம் அவ்வாறே கூறுகிறது என்று நாம் அறிவோம். அது சரிதான்.

**60-12-04M இயேசுகிறிஸ்துவை பற்றிய வெளிப்படுத்துதல்**

~ ~ ~ ~ ~

7. புத்தியில்லாத கன்னியரிடம் அவர்களது விளக்குகளில் எண்ணெய் இருக்கவில்லை. அவர்கள் புறம்பான இருளில் தள்ளப் படுவார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். அங்கே அவர்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அவர்கள் மகா உபத்திரவ காலத்திற்குள் செல்வார்கள். அதைப் பற்றி உங்களது வேதாகமங்களின் அடிக்குறிப்புகளில் (Footnotes) பார்த்தால் அறிந்து கொள்வீர்கள். அது மீண்டும் மகா உபத்திரவ காலத்திற்குள் கொண்டு செல்லும். புத்தியில்லாத ஐந்து கன்னியரும் கைவிடப்பட்டு, மகா உபத்திரவத்தினுள் செல்பவர்கள். நமக்கு நேரம் இருந்தால் இதில் நமக்கு ஒரு பெரிய பாடம் உள்ளது.

**60-12-04E பத்மு தீவு தரிசனம்**

~ ~ ~ ~ ~

76. "ஆனால் நீ அங்கே போய் சேருமட்டும் நான் ஒன்றும் செய்யக்கூடாது" நான் அதனை விரும்புகிறேன். தீவிரமாகுங்கள்! தப்பித்துக்கொள்ளுங்கள்! துரிதமாகுங்கள்! தப்பித்துக்கொள்!

77. கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படுவதாக! இந்த சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் என்று இயேசு வாக்களித்தார். இது இப்பொழுது அநேக வருடங்களாக பிரசங்கிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது. இது இங்கே கடைசி நேரத்திற்கான மகத்தான கடைசி அடையாளமாய் இருக்கிறது. தூதர்கள், "தீவிரம்" என்று சத்தமிடும் சற்று முன்னர் அவர் திரும்பி, "சாராள் நகைத்தாள்?" என்றார். சங்காரத்தூதனானவர், "நான் அவர்களுடைய பாவங்களைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே அது உண்மைதானா அல்லது இல்லையா என்று

காணும்படியாக நான் இறங்கி வந்துள்ளேன்" என்றார். அது உண்மையாயிருந்ததை அவர் கண்டார். செய்தியோ கிருபையும், இரக்கமும், விடுதலையுமா யிருந்தது. ஆனால், "தீவிரம், தீவிரம்" என்பதாயிருந்தது.

78. பிள்ளைகளே, தயங்கி திகைத்துக் கொண்டிருக்க வேண்டாம். துரிதமாகுங்கள்! துரிதப்படுங்கள்! சீக்கிரம் ! நேரம் சமீபமாயிருக்கிறது. ஓடுங்கள் (எங்கே?) சிறு பறவைகள் வெளியே ஓடினது போன்று, இந்த நவீன பாபிலோனின் மதிற்சுவர்களிலிருந்து விலகியோடுங்கள். இந்த பண்டைய பெரிய ஸ்தாபனங்களோ, ''இந்நேரத்தில் எந்த வித்தியாசமும் இல்லையே" என்றே கூறுகின்றன. இந்த பெரிதான பண்டைய அவிசுவாச சபைகளோ, ''தெய்வீக சுகமளித்தல் என்ற அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது. அற்புதங்களே

கிடையாது” என்றே கூறுகின்றன. இந்த மதிற்சுவர்களிலிருந்து விலகியோடுங்கள். ஏனென்றால் அவைகள் நொறுங்கி தூளாகப் போகின்றன. அவைகள் அழிவுக்குள்ளாகவும், வீழ்ச்சிக்குள்ளாகவும் சென்று கொண்டிருக்கின்றன. ஏனென்றால் என்னுடைய தேவன் அவ்வண்ணம் கூறினார்.

79. அதோ அப்பாலுள்ள கல்வாரிக்கு மத்தியிலே ஓடுங்கள். பறவைகள் மரங்களுக்கு சென்றதானால், நீங்களும் கூட மரத்தண்டை செல்லுங்கள், கிறிஸ்துவானவர் அறையப்பட்ட அந்த மரத்தண்டைக்கே செல்லுங்கள். அவருடைய இரக்கத்திற்கு மத்தியிலே தொங்கி, புயலானது கடந்து போகின்றவரையிலும் தேவனண்டை கதறுங்கள்.

80. துரிதமாகுங்கள், தப்பித்துக் கொள்ளுங்கள்! இங்கு வந்து சேருங்கள், ஏனென்றால் நீங்கள் வெளியே செல்லும் வரை நான் ஒன்றும் செய்யக்கூடாது. அவர் உங்கள் பேரில் காத்துக் கொண்டிருக்கிறார். இந்த நவநாகரிக காரியங்களிலிருந்து விலகியிருங்கள். வேறு விதமான திரைப்படங்கள், தொலைக்காட்சியில் தோன்றும்போது அதிலிருந்து விலகியிருங்கள். வானொலியில் இந்த ராக் அண்ட் ரோல் இசையானது ஒலிபரப்பப் துவங்கும்போது அதனை நிறுத்திவிடுங்கள். ஒரு பெண்மணியைப்போல் நடந்து கொள்ளுங்கள். ஒரு பெண்மணியைப் போன்று உடை உடுத்துங்கள். ஒரு புருஷனைப் போல் நடந்து கொள்ளுங்கள். ஒரு புருஷனைப்போல உடை உடுத்துங்கள். ஒரு கிறிஸ்தவனைப் போல் பேசுங்கள். ஒரு கிறிஸ்தவனைப்போல

ஜீவியம் செய்யுங்கள். எல்லாத் தொடர் பிணைப்புகளையும் அழித்து விடுங்கள். துரிதமாக செயல்படுங்கள்! வெளியே வாருங்கள்! அழிவு சமீபமாயிருக்கிறது. தேவன் பிணியுற்றவராய், களைப்புற்றவராய் இருக்கிறார்.

81. ஓ, இது நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் காலதாமதமாயுள்ளது. வேளையானது சமீபமாயிருக்கிறது. தூதனுடைய இரக்கமானது, இரக்கத்தின் தூதன் அனுப்பின் அவருடைய செய்தியானது இன்றிரவு இங்கேயிருக்கிறது. நீங்கள் அதை விசவாசிக்கிறீர்களா? [சபையோர், "ஆமென்" என்கிறார்கள். - ஆசி.) உபத்திரவ காலத்திற்கு முன்னர் சபையானது செல்ல வேண்டியதாயிருக்கிறதா? ("ஆமென்")

82. பாருங்கள், இஸ்ரவேலர் கோசேனுக்குள் சென்றனர், எகிப்தியரோ

இருளுக்குள்ளாகச் சென்றனர். இஸ்ரவேலர் கோசேனுக்குள்ளாகச் சென்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள்ளாக கொண்டு செல்லப்பட்டனர். எகிப்தியரோ இருளுக்குள்ளாகச் சென்று, சவக்கடலில் புதைக்கப்பட்டனர்.

83. துரிதமாக செயல்படுங்கள்! துரிதமாக செயல்படுங்கள் ! தப்பித்துக் கொள்ளுங்கள்! இதுவே உங்களுடைய கடைசித் தருணமாயிருக்கலாம். நினைவிருக்கட்டும், நாம் ஏவுகணைகள் பொருத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம். நாம் அவைகளைக் குறித்து கேள்விப்படுகிறோம். நாம் அதனை செய்தித்தாளில் பார்க்கிறோம். முழு உலகமே ஒரு நடுக்கத்தில் இருக்கிறது. தேவன் கூறின ஒவ்வொரு காரியமும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

## 58-03-09E சபையானது உபத்திரவத்திற்கு முன்னரே சென்றுவிடுமா?

~~~~~

271. ஏன், அவர்கள் அதைச் செயல்படுத்துகிறார்கள். அன்றிரவு தொலைகாட்சியில் அது வந்தது. மெத்தோடிஸ்ட் சபைகளும், பாப்டிஸ்ட் சபைகளும், முழு கிறிஸ்தவ சபைகள் என்ற அமைப்பும், மற்ற எல்லாமும் கத்தோலிக்க சபையுடன் இணைந்து, ஒரே பீடத்தின் முன்பு நிற்க முயற்சிக்கின்றன. கம்யூனிஸ்ட் என்று குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஒரு பிஷப் அன்றிரவு என்ன கூறினார்? நான் தொலைக்காட்சியில் அதைக் கண்டேன். அவர்களின் எல்லாக் கூட்டத்தாரும்! நேரம் வரும்போது அடக்குமுறை கையாளப்படும், பரிசுத்த ஆவி மெத்தோடிஸ்ட், பாப்டிஸ்ட் மீது விழும். அவர்கள் எல்லாரும் பாஷைகள் பேசி,
~~~~~

தேவனைத் துதித்து, வியாதியஸ்தரை சுகமாக்கி, தீர்க்கதரிசனம் உரைப்பார்கள், எல்லா அற்புதங்களும் அடையாளங்களும் சம்பவிக்கும். தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மேலே செல்வர், மீதமுள்ளவர்கள் உபத்திரவ காலத்திற்குள் செல்லத்தக்கதாக இங்கேயே விடப்படுவார்கள். காலமானது முடியும் போது, என்ன சம்பவித்தது என்பதை அவர்கள் கண்டு, இரத்த சாட்சிகளாய் மரிக்கவேண்டும்.

272. பிறகு கவனியுங்கள். ''நல்லது, இப்பொழுது, சகோதரன் பிரன்ஹாமே, இம்மக்கள் அங்கே வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில் இருப்பார்கள், என்று எங்களுக்கு கூற முற்படுகிறீரா?'' அவர்கள்

இருப்பார்கள்.... மணவாட்டி ஒருபோதும் நியாயந்தீர்க்கப்படமாட்டாள். இல்லை, ஐயா. அவள் கிறிஸ்துவிற்குள் இருக்கின்றாள். அவர்கள் எப்படி

கிறிஸ்துவிற்குள் செல்கின்றனர்? ''நாமெல்லாரும் ஒரே ஆவியினால் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டுள்ளோம்'' அது சரிதானே?

273. இப்பொழுது, இங்கே கவனியுங்கள். வேதாகமம் "நியாயத்தீர்ப்பு ஆரம்பித்தது, அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன'' என்று கூறுகின்றது. அது சரியா? பாவிகளுடைய புத்தகங்கள். ''வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது,'' ''அது ஜீவ புஸ்தகமாய் இருந்தது, ஒவ்வொரு மனிதனும் இவ்வாறு நியாயந்தீர்க்கப்படுவான்.'' அது சரியல்லவா? நீயாயத்தீர்ப்பை செய்வது யார்? இயேசுவும் பரிசுத்த வான்களும். அவர் வந்தார் ''அவர் சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப்போல் துப்புரவாகவும் இருந்த நீண்ட ஆயுசுள்ளவருக்கு சேவை செய்தார். அவருடன் ஆயிரம் பதினாயிரம் பேர்

வந்து, நியாத்தீர்ப்பில் அவருக்கு ஊழியஞ் செய்தனர். ''இங்கே இயேசு இராஜாவும், ராணியுமாக திரும்ப வருகிறார், கலியாணம் முடிந்தது, அவர் கலியாணமானவர். இங்கே ராஜாவும் ராணியும் நிற்கின்றனர். பரிசுத்தமாக்கப் பட்ட கூட்டம் அங்கே நிற்கிறது, தேவன். ''இங்கே என்னுடைய வலது பக்கத்தில் நில்லுங்கள்'' அந்த புஸ்தகம் திறக்கப்பட்டது, அவர் பாவிகளைப் பார்த்து, ''என்னுடைய இடது பக்கத்திற்கு வாருங்கள்'' என்று கூறுகிறார். ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புஸ்தகத்தில் பெயரெழுதப்பட்ட நபர்கள் இங்கே இருக்கின்றனர்.

## 53-07-29 கேள்விகளும் பதில்களும் COD #1

~ ~ ~ ~ ~

260. உங்களுடைய ஐந்து புத்தியுள்ள கன்னிகைகள் அங்கே தங்கள் விளக்குகளில் எண்ணெய்

உடையவர்களாய் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கேற்ற விசுவாசம், அற்புதங்கள், அடையாளங்கள், தீர்க்கதரிசனங்கள், மற்ற எல்லாவற்றையும் விசுவாசிப்பார்கள். மீதமுமள்ளவர்களிலிருந்து இந்த ஐந்து பேர்கள் வெட்டி எடுத்து கொள்ளப்பட்டனர்.

261. மற்ற ஐந்து பேரும் இன்னும் கன்னிகைகளாய் இருக்கின்றார், அவர்கள் இழந்து போகப்படமாட்டார்கள், ஆனால் உபத்திரவ காலத் திற்குள் செல்வர். இயேசு கூறினார், ''அங்கே ...''

262. அவர்கள், ''உங்களுடைய எண்ணெயில் சிறிது எங்களுக்குத் தாருங்கள், எங்களுக்கு இப்பொழுது பரிசுத்த ஆவி தேவை'' என்றனர்.

**53-07-29 கேள்விகளும் பதில்களும் COD #1**

~~~~~
~~~~~